DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# OS.No.7/2016

Deposition of Witness : PW 1

| | |
|---|---|
| Name - மாதவன் | Father’s Name - |
| Village\City - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2023.

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**6,9,10, 15 முதல் 19, 22 முதல் 26, 28, 29, 31 முதல் 34 பிரதிவாதிகள்.த.கு.வி.:**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | தொட்டப்பகவுண்டர் யார்? எந்த வருடம் இறந்தார்? உங்களுக்கு என்ன உறவு வேண்டும் |
| பதில் | : | 1935ம் வருடம் இறந்தார். எனக்கு என்னுடைய அப்பாவின் தாத்தா வேண்டும். அவர் அப்பாவின் தாத்தா உறவு முறை வேண்டும். |
| கேள்வி | : | தொட்டப்பகவுண்டர் 1935 ம் வருடம் இறந்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளரீகளா என்றால்? |
| பதில் | : | இல்லை. |
| கேள்வி | : | பிராதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் யார் தெரிவித்தார் என்றால்? |
| பதில் | : | நானும், என் அம்மாவும் தெரிவித்தோம். |
| கேள்வி | : | உங்களுடைய பிராது பாரா 3 f ல் தொட்டப்பகவுண்டர் 1940ம் வருடம் இறந்ததாக சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | வழக்குரையில் நீங்கள் சொல்வது போல் தொட்டப்பகவுண்டர் 1935ம் ஆண்டோ 1940 ஆண்டோ காலமாகவில்லை அவர் 1957 ம் ஆண்டு தான் காலமானார் என்றால் ? |
| பதில் | : | சரியல்ல. |

| | | |
|---|---|---|
| கேள்வி | : | இந்த வழக்கிற்காக பின் யோசனையுடன் சொல்லபட்ட விபரங்களில் இதுவும் தவறான விபரம் என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | உங்கள் உடன் பிறந்த சகோதரர் முருகன் என்பவர் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்பதற்கு எதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்? |
| பதில் | : | இல்லை |
| கேள்வி | : | பாண்டியன் என்ற மாரிமுத்து மனைவி செல்லம்மா எந்த வருடம் காலமானார்? |
| பதில் | : | ஞாபகமில்லை. 1980 க்கு பின்பு காலமானார் . |
| கேள்வி | : | கெப்பனகவுண்டர் எந்த வருடம் காலமானார் ? |
| பதில் | : | ஞாபகமில்லை. |
| கேள்வி | : | கெப்பனகவுண்டர் மகன் பெயர் சுப்பையா என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | சுப்பையா மனைவி பெயர் சரஸ்வதி என்றால் |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | சுப்பையாவும், சரஸ்வதியும் எப்போது காலமானார் என்றால்? |
| பதில் | : | ஞாபகமில்லை. |
| கேள்வி | : | உங்கள் அப்பாவின் தாத்தா தொட்டப்பகவுணடருக்கு மேலசொக்கநாதபுரத்தில் எந்த இடத்தில் சொத்து என்ன என்ன சொத்துகள் இருந்தது என்றால்? |
| பதில் | : | தெரியாது. |
| கேள்வி | : | எதை பார்த்தால் ஞாபகம் வரும் ? |
| பதில் | : | சர்வே எண்ணை பார்த்தால் ஞாபகம் வரும். |
| கேள்வி | : | சர்வே நம்பரை எதில் பார்த்தால் ஞாபகம் வரும்? |
| பதில் | : | வா.சா.ஆ 1 பாகபத்திரத்தை பார்த்தால் ஞாபகம் வரும். |
| கேள்வி | : | அந்த பாகபத்திரத்தில் தொட்டப்பகவுணடருக்கு என்ன என்ன சொத்து இருக்கிறது என்றால்? |
| பதில் | : | பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ளது. |

குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 23.06.2023 அன்று வெள்ளிகிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2023.06.24 14:31:59 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
23.06.2023.